(ஆ) ஆம் என்றால், எத்தனை காலம்?

(இ) இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) 31-10-77 முதல் 15-1-78 வரை இப்பள்ளி செயற்படாமலிருந்தது.

(இ) 1,800.

பூம்புகார் பகுதியில் தொல்பொருள் ஆய்வு.

*411 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித்துறை பூம்புகார் பகுதியில் இதுவரையில் ஆராய்ந்து கண்டறிந்தவற்றை அரசுக்கு அறிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மத்திய தொல் பொருள் ஆராய்ச்சித்துறை பூம்புகார் பகுதியில் நடத்திய ஆய்வு குறித்து அரசுக்கு எவ்விதத் தகவலும் அனுப்பவில்லை.

(ஆ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: மத்திய தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தினர் பூம்புகாரில் அத்தகைய முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். ஐம்பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம் மணிமேகலை போன்றவற்றில் கூறப்பட்டுள்ளபடி பூம்புகார் பகுதியில் நகர அமைப்பு இருந்தது என்பது பற்றியெல்லாம் தெரிய வருகிறது. அத்தகைய தடயங்கள் அகப்பட்டுள்ளன என்றால் அதுபற்றி இனியேனும் அரசு அறிந்து கொள்ள முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மத்திய அரசின் தென் வட்ட தொல்பொருள் ஆய்வுத் துறை காவிரிப்பூம்பட்டினத்துக்கு அருகிலுள்ள காவிரி டெல்டா பகுதியில் 40 முக்கிய இடங்களைத் தேர்ந்தெடுத்திருந்தபோதிலும், சென்ற 1963 ஆம் ஆண்டிலிருந்து

1978 மார்ச் 6]

1973-ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலத்தில் கீழையூர், வானகிரி, பல்லவனேஸ்வரம் ஆகிய இடங்களில் மட்டும் ஆய்வு செய்தது. அவ்வாய்வில் கண்டுப்பிடிக்கப்பட்ட முக்கியப்பொருள் களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

1. நடுவில் தண்ணீர் செல்வதற்கான வசதியோடு கட்டப் பட்டிருக்கும் ஒரு கட்டடப்பகுதி, கீழையூர், கண்டுபிடிக்கப் பட்டது. இதன் அருகில் இரு வரிசைகளில் மரத் தூண்கள் நடப்பட்டிருந்தன. அவற்றின் அடிப் பகுதிகள் கிடைத்துள்ளன. இவைகளைக் கொண்டு பார்க்கையில் பொருள்கள் ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் படகுகள் வந்து செல்லும் துறைமுகப் பகுதி யாக அது இருக்கலாம் எனத் தெரிகிறது.

2. வானகிரியிலும் ஒரு கட்டடப்பகுதி கண்டுபிடிக்கப் பட்டது. அது குளத்துக்கு நீர் வரும் வழியில் அமைக்கப் பட்டிருந்த மதகாகத் தெரிகிறது. அதன் இரு பக்கங்களிலும் அரை வட்டச் சுவர் காணப்படுகிறது. அச்சுவர்கள் குளத்தின் மண்கரையோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்ததாக இருக்கலாம். இக்குளத்து நீர் பாசனத்திற்காகவும் குடி நீருக்காகவும் பயன் படுத்தப்பட்டிருக்கலாம். இப்பகுதியில் மிகப் பெரும் அளவு மணல் படிந்திருப்பதைப் பார்க்கையில் காவிரியாற்றிலிருந்து இக்குளத்துக்கு நீர் இக்கட்டடப் பகுதியின் வழியாக வந்திருக்க லாம் என்று தெரிகிறது.

3. பல்லவனேஸ்வரம் பகுதியில் புத்த விஹாரம் ஒன்று இருந்தது என்பதை அகழ்வாய்வு புலப்படுத்தியது. புத்த ஸ்தூபாவின் உடைபாடுகளும் ஆயசா தூணின் சிதறல்களும் கூடக் கண்டுபிடிக்கப்பட்டன. 1.7 மீட்டர் கனமுள்ள சுவர்கள் செங்கல், சுதை வேலைப்பாடுகளினால் அழகுபடுத்தப்பட்டன.

யோக நிலையிலுள்ள புத்தரின் செப்புத் திருமேனியும் சுதையால் செய்யப்பட்டுள்ள துவாரபாலகரின் தலைப்பகுதியும் முற்காலச் சோழர்களைச் சார்ந்த சதுரக் காசுகளை வார்ப்பிப் பதற்கான சுடுமண் அச்சும் இங்கு கிடைத்திருப்பது இவ்விஹாரம் கி.பி. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து 6 ஆம் நூற்றாண்டுக்கு இடைப் பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்காக முக்கிய சான்றுகளாக அமைகின்றன.

கறுப்பு, சிவப்பு பானை ஓடுகள், ரௌலட்டட் ஓடுகள் ஆகியவைகளோடு சதுரக்காசுகளும் இங்கு கிடைத்திருப்பது கி.பி. முதல் ஐந்து நூற்றாண்டுகளில காவிரிப் பூம்பட்டினம் சிறந்த ஒரு துறைமுகமாக விளங்கியிருந்தது என்பதைத் தெரிவிக்கிறது.

இப்பொழுது சிறு பகுதி வெளிக்கொணரப்பட்டிருக்கும் கட்டடத்தின் முழுப்பகுதியையும் அறிவதற்கும் முழுமையாக மறைந்திருக்கும் மற்ற முக்கியப் பொருட்களை வெளிக்கொணர்வதற்கும் மேற்கூறப்பட்ட இடங்களிலும் காவிரிப் பூம்பட்டினத்துக்கு அருகிலுள்ள வேறு சில இடங்களிலும் மேலும் அகழ்வாய்வு செய்வது மிகவும் தேவைப்படுகிறது. மேலும் அகழ்வாய்வினைத் தொடர்வதற்குரிய இடங்கள் தனியார்வசம் உள்ளபடியால் அவற்றை வாங்குவதில் காலதாமதம் ஆகிறது.

இது சம்பந்தமாக மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்கும் தஞ்சை மாவட்ட ஆட்சியருக்கும் 1973 முதல் கடிதப் போக்குவரத்து நடந்து வந்துள்ளது. மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை அகழ்வாய்விற்காகத் தெரிந்தெடுத்த இடத்தில் தற்போது மக்களால் வழிபடும் கோவில்களும், குளங்களும் இருக்கின்றன.

இம்மாதிரி இடங்களை நில ஆர்ஜிதம் செய்யலாகாது என அதற்குரிய விதிகளில் உள்ளன. ஆதலின் அவைகளை விட்டுவிட வேண்டுமென்று மாவட்ட வருவாய் அலுவலர் மத்திய தொல்பொருள் துறைக்கு கூறியுள்ளார். தவிரவும் அவ்விடத்தில் வீடு கட்டிக் குடியிருப்பவர்களை வேறு எவ்விடத்திலாவது குடியமர்த்த வேண்டுமென்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இது பொதுக் காரியமாதலால் மாநில அரசே இம்மாதிரிக் குடியமர்த்தும் வேலையை எடுத்துக் கொண்டால் நலமென தஞ்சை மாவட்ட ஆட்சியருக்கு மத்தியத் தொல்பொருள் துறை தெரிவித்துள்ளது. இவ் விஷயத்தை மாநில அரசே துரிதப் படுத்தி முடித்துக் கொடுக்குமாறு மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறை 24-12-77-ல் இத்துறையைக் கேட்டுக் கொண்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு நீண்ட விவரங்களை எதிர்காலத்தில் அமைச்சர்கள் மேஜைமீது வைத்துவிட்டால் நலம் என்று கருதுகிறேன்.